**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 2/2020**

**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. நடராஜன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சின்னக்காளை** | **Calling** | : | |
| **Village** | : | **கதிரிபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **63** |
| | | | **Dated** | : | **05.03.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1 and A2 absent, petition filed and allowed. Others present. A4 died (CA). Both side counsels present.**

பட்டியல் சாட்சி 9 திரு. நடராஜன் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 8 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக கேத்தையக் கவுண்டன்பட்டியில் உள்ள டீக்கடை முன்பாக டீ சாப்பிட்டு கொண்டு இருந்தபோது, போலீசார் அங்கு வந்து அடிதடி வழக்கிற்காக விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள். அதற்காக என்னிடம் சாட்சியாக இருக்க கையெழுத்து கேட்டார்கள். அப்பொழுது அந்த கையெபழுத்தை போட்டேன். அந்த பார்வை மகஜர் Ex. P3. என்னுடன் மல்லையன் என்பவரும் கையெத்து போட்டார். அவர் தற்போது இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

**நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதி இருந்தது என்று படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். நான் மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டுவிட்டு, தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.03.05 18:27:58 +0530